உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.302/2021

பெயர் :முகமது அலி ஜின்னா(அ.சா.2)

தகப்பனார் பெயர் :செய்யது பாவா ராவுத்தர்

கணவர் பெயர் :

வயது :65

கிராமம் :முத்தப்பாபார்க்ரோடு, புதுவயல்

வட்டம் :சிவகங்கை மாவட்டம்

தொழில் :நெல் அரிசி வியாபாரம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

23.01.2025

முதல் விசாரணை:

யூசுப் சாகிப் என்பவரை எனக்கு தெரியும். அவர் முன்பு லாரி வைத்திருந்தார். அதற்கு முன்பாக சௌதியில் வேலை செய்து வந்தார். கடந்த 08.08.2019 அன்று யூசுப் சாகிப் உடைய லாரி ஓட்டுநர் பரித் அவரிடம் அவர் கைகளை பின்னால் கட்டி போட்டு உடை இல்லாமல் அவரிடம் இருந்து பணம் ரூபாய் 12000த்தை பறித்து கொண்டதாக என்னிடம் சொன்னார்கள். அ.சா.1 யூசுப் சாகிப் என்னிடம் தெரிவித்தவுடன் நானும், யூசுப் சாகிப்பும் மேலூர் காவல்நிலையத்திற்கு வந்தோம். காவல்நிலையத்தில் ஓட்டுநர் பரித் கொடுத்த தகவலின் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டது. காவலர்கள் அது தொடர்பாக எங்களிடம் விசாரணை செய்தார்கள். நாங்கள் நடந்தவற்றை கூறினோம்.

குறுக்கு விசாரணை :

நடந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எனக்கு அதுபற்றி நேரடியாக தெரியாது. நடந்த சம்பவத்தை டிரைவர் யூசுப் சாகிப்பிடம் தெரிவித்து அவர் என்னிடம் தெரிவித்ததால் தான் தெரியும். நான் உடன் வந்திருந்தேன். நான் செல்வதற்கு முன்பாகவே புகார் கொடுக்கப்பட்டுவிட்டது.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.01.23 18:01:02 +0530

Assistant Sessions Judge

Melur